உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்ற முறையிலே சம்பளத்திற்கு உச்சவரம்பு கொண்டுவர முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, வருமானத்தினுல் மட்டும் என்பதல்ல. வருமானம் இல்லாமல் சம்பாதிக்கக் கூடியவர்களிடையே இருக்கிற ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள் இவைகள் எல்லாம் அகற்றப்பட்டு சம வாய்ப்புகளும், சம உரிமைகளும் பெருக வேண்டுமென்று இன்றைக்கு ஆளுகிற நம்முடைய கட்சியின் சித்தாந்தம். ஆனுல் நம்முடைய முதல்வர் அவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன் சொன்னதைப்போல, திரும்பத் திரும்பச் சொன்னுல் மாநில சுயஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று இருக்கும். துரதிருஷ்டவசமாக அக்ரிகல்சுரல் இன்கம் தவிர மற்ற எல்லா வரி விதிக்கிற உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அக்ரிகல்சுரல் இன்கம்முக்கும் வரி விதிக்கிற உரிமையில் மத்திய சர்க்கார் ஆக்கிரமிப்பு செய்து வருகிருர்கள். அதைப் பலவகையிலும் இந்த அரசு ஆட்சேபித்து வருகின்றது. இது கட்டுப்பட்ட அரசாக இருக்காது. இப்படிப்பட்ட பெரிய காரணங்களிலே நம்முடைய யோசனைகள் சொல்வதற்கு கூட கட்டுப்படுத்தப்பட்ட நிலைமை இருக்கிறது.

Treasury and Accounts Branch

* 191 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government have given instruction to the State Treasuries to reorganise the method of working of the Treasury and Accounts Branch based on the recommendation of the Administrative Reorganisation Commission; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Administrative Reforms Commission, it is referred to the Director of Treasuries and Accounts and the Accountant-General, Madras for their remarks. On receipt of their remarks, the recommendation will be examined and the view of the State Government will be communicated to the Government of India.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக்குழு கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் பேரவைத் தலைவரின் அறையில் கூடும். அதற்குக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.